Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 286

வியாழக்கிழமை
08 செப்ரெம்பர் 2022

ஆவணி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கடனுக்கு எரிபொருள் வழங்குகிறது சவூதி

கொழும்பு, செப்.8
எரிபொருள் நெருக்கடியில் சிக்கியுள்ள சிறிலங்காவுக்கு கடன் அடிப்படையில் தொடர்ச்சியாக எரிபொருள் வழங்க சவூதி அரேபியா இணங்கியுள்ளது என்று அரசாங்க மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளை ஐந்து வருட காலத்துக்கு கடன் அடிப்படையில் தொடர்ச்சியாக வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஜனாதிதிரணில்விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றும், ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக சவூதி அரேபியா

11 ›

# நிலையற்ற அரசால் ரணிலுக்கு நெருக்கடி

### சர்வதேசத்தின் உதவிகள் தள்ளிப்போகும் அபாயம்
### நாணய நிதிய உடன்பாட்டை செயற்படுத்துவதிலும் சிக்கல்

கொழும்பு, செப்ரெம்பர் 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சிகள் இழுபறியில் உள்ள நிலையில், சிறிலங்காவுக்கான வெளிநாட்டு உதவிகளில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்று அறிய முடிகின்றது. அதனால் தேர்தல் ஒன்றை நாடு எதிர்கொள்ளவேண்டிய நிலைமை உருவாகலாம் என்றும் கூறப்படுகின்றது.

11 ›

## கொரோனா; மூவர் சாவு!

கொழும்பு, செப்.8
நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த உயிரிழப்புக்கள் நேற்றுமுன்தினம் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட இரு பெண்களும், ஒரு ஆணும் அடங்குகின்றனர்.

இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 719 ஆக உயர்ந்துள்ளது. (அ-எ-இ)

## இராஜாங்க அமைச்சர்கள் இன்று பதவியேற்பு?

கொழும்பு, செப்.8
இராஜாங்க அமைச்சர்கள் குழுவொன்று இன்று பதவியேற்கும் என்று அரசாங்க உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன. ஆயினும் அதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

11 ›

## ரணிலின் ஆட்சி கவிழாது: பிரதமர் பதவியும் மாறாது

### தினேஷ் குணவர்த்தன விளக்கம்

கொழும்பு, செப்.8
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்கமுடியாது. இந்த ஆட்சியில் அரசியல் சூழ்ச்சிக்கு ஒருபோதும் இடமில்லை.

11 ›

### முச்சந்தி முரளி



"இப்பிடியே பதவிக்கு அடிபட்டு கடைசியா நாட்டை சுடுகாடு ஆக்கிப்போட்டுத்தான் போவினம் போல"

### சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்ட

## மாணவி கிருஷாந்திக்கு நாடாளுமன்றில் அஞ்சலி

கொழும்பு, செப்.8
சிறிலங்கா இராணுவத்தால் யாழ்ப்பாணம் செம்மணியில் வைத்து கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உயர்தர மாணவி கிருஷாந்தி குமாரசுவாமிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்றத்தில் அஞ்சலி

11 ›

## தேசிய சபை உருவாக்கத்துக்கு கட்சித் தலைவர்கள் இணக்கம்

கொழும்பு, செப்.8
நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 37 உறுப்பினர்களைக்

11 ›

## சிறிலங்காவின் மீறல்கள்; வெளியானது வரைபடம்

கொழும்பு, செப்.8
உள்நாட்டு மோதலின் போது (1983 முதல் 2009வரை) சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் இடம்

10 ›

# முல்லைத்தீவு குருந்தூர்மலை பௌத்த வரலாற்று இடமாம்

### நாடாளுமன்றில் வீரசேகர கொக்கரிப்பு



கொழும்பு, செப்.8
இது சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இங்கு பழைய தூபிகளை பராமரிக்க எவருடைய அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர. வேறு நாட்டில் என்றால் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமற் போயிருப்

11 ›

## சரத் வீரசேகர இனவெறியர்

### கஜேந்திரன் எம்.பி. பதில் தாக்குதல்

கொழும்பு, செப்.8
மக்களுக்கும் சிறுவர்களுக்கும்தான் போஷாக்குப்பிரச்சினை. ஆனால், இங்குள்ள சிங்கள நாடாளுமன்ற

10 ›

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

போராட்டம் ஆரம்பமாக முன்னர்

# அரசியல் கைதிகளை உடன் விடுவியுங்கள்!

## அருட்தந்தை சக்திவேல் வேண்டுகோள்

**கொழும்பு, செப். 8**

**அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எதிர்பார்ப்பு இன்றுவரை நிலைநாட்டப்படவில்லை. இதனால் அவர்கள் மீண்டும் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் வாய்ப்பே உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அவர்களை உடனே விடுதலை செய்யுங்கள்- இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் நேற்று அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது :

விடுதலைப்புலிகளின் மீளுருவாக்கம் என்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வெலிக்கட மற்றும் மகசின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தாம் கைதுசெய்யப்பட்ட நாள்களில் இருந்து இன்றுவரை நீதிமன்றத்துக்கு அழைக்காதிருக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நியாயம் கோரியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தில் அரசும், நீதி அமைச்சும் கவனம் செலுத்தி இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு நியாயத்தை நிலை நாட்டுமாறு அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கானதேசியஅமைப்பு அவசர வேண்டுகோளை விடுகின்றது.

சர்வதேசத்தை நம்ப வைப்பதற்காகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்கின்றோம் என்று வெளி உலகத்துக்குக் காட்டவும் கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் புலி உருவாக்கம் எனக் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரை ஆட்சியாளர்கள் பிணையில் விடுவித்தனர். மீதமுள்ளவர்களுக்கு எதிரான வழக்கை நீதிமன்றம் எடுக்காது காலத்தை இழுத்தடிப்புச் செய்வது நியாயத்தை மறுக்கும் திட்டமிட்ட செயலாகும். இதனை அனுமதிக்க முடியாது.

இந்த நிலையில் இவர்கள் தமக்கு நியாயம் வேண்டியும், ஒட்டுமொத்த அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பது குடும்பத்தாரை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவர்களை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இருந்து மீட்குமாறும், உடல் நிலையைக் கவனத்தில் கொண்டு விடுதலையை வலியுறுத்துமாறும் போராட்டத்தில் ஈடுபட்டோரின் குடும்பத்தினர் கேட்கின்றனர்.

எனவே தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் இதனைக் கருத்தில் கொண்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தம் கொடுப்பதோடு ஒட்டுமொத்த அரசியல் கைதிகளும் விடுதலையாவதற்கு கூட்டுச் செயற்பாட்டை முதன்மைப்படுத்துமாறு அரசியல் கைதிகளின் பெற்றோரோடு அரசியல் கைதிகளின் தேசிய அமைப்பும் கேட்டுகொள்கின்றது- என்றுள்ளது. (ம-14.22)

## பொதுக்கூட்டணியில் சுயாதீனக் கட்சிகள்!

கொழும்பு, செப். 8

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அரசியல் கட்சிகளை பொதுவானதொரு கூட்டணியின்கீழ் ஒன்றிணைப்பதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கான அரசியல் ரீதியிலான நகர்வுகளை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

பெரமுனவின் கூட்டணியில் இருந்து வெளியேறிய விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, அத்துரெலிய ரத்தனதேரர் உட்பட 8 கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து 'மேலவை இலங்கை கூட்டமைப்பு' எனும் பெயரில் புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

அதேபோல டலஸ் அழகப்பெரும தலைமையிலான 13 எம்.பிக்கள் அடங்கிய குழுவும், 'சுதந்திர மக்கள் சபை' எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கியுள்ளது.

அநுரபிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி உள்ளிட்டவர்கள் தனி அணியாக செயற்படுகின்றனர். சுதந்திரக்கட்சியும் தற்போது தனித்தே இயங்கிவருகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி கட்சிகளை, சக்திகளை ஒரு குடையின் கூட்டணியின்கீழ் கொண்டுவருவதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. (ம-44)

## சிறைகளுக்கு அதிகமாக உணவு வழங்க வேண்டும்

### ரஞ்சன் கோரிக்கை

கொழும்பு, செப்.8

சிறைச்சாலைகளுக்கு அதிகமான உணவுப் பொருள்களை வழங்குவதற்கு தனபதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் சிறைகளில் நிலவும் உணவுப் பற்றாக்குறை தொடர்பில் வினவியபோதே ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார். சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு உணவூட்ட செல்வந்தர்களுக்கு வாய்ப்பளித்தால், சிறைகளில் உணவுப்பற்றாக்குறையை தீர்க்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கடன் மறுசீரமைப்புக்கு உதவுவதற்குத் தயார்!

### அமெரிக்கா அறிவிப்பு

கொழும்பு, ஓக. 8

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்குத் தயார் என அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா உதவும். பரிஸ் கிளப் கொள்கைகளின் அடிப்படையில் நிதி உத்தரவாதங்களை வழங்கும் என தெரிவித்துள்ள அவர், இலங்கை தொடர்பில் உலக வங்கி உட்பட சர்வதேச நாணயநிதியம் உட்பட சர்வதேச நிதியமைப்புகளுடன் அமெரிக்கா பேச்சுக்களை மேற்கொள்ளும் - என்றார். (ம)





# சிறார்களிடையே மந்தபோசணை 'யுனிசெப்' அறிக்கை தவறானது!

## சுகாதார அமைச்சு நிராகரிப்பு

கொழும்பு, செப். 8

ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்ளும் நாடுகளில் இலங்கை 6ஆவது இடத்திலும் தெற்காசியாவில் 2ஆவது இடத்திலும் உள்ளது என யுனிசெப் வெளியிட்ட அறிக்கையை சுகாதார அமைச்சு நிராகரித்துள்ளது.

சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் இதுதொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்ததாவது:

அண்மையில் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்ட யுனிசெப் [illegible] சிய பிராந்தியப் பணிப் [illegible] அட்ஜே தெற்காசியாவில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள இரண்டாவது நாடாக இலங்கை இருக்கிறது என்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்களின் உணவுப்பழக்கம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2021ஆம் ஆண்டின் இறுதியில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் நடத்திய தேசிய அளவிலான கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போசாக்கின்மை நிலை 13.2 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. [illegible] டைக் கணக்கிடு [illegible] ற உயரம், உயரத்துக்கான எடை மற்றும் வயதுக்கேற்ற நிறை ஆகிய மூன்று காரணிகளைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆனால் யுனிசெப் தனியாக உயரத்துக்கேற்ற நிறையை மட்டும் பயன்படுத்துவதன் அடிப்படையில் தவறான அறிக்கையைத்தயாரித்துள்ளது. ஆபிரிக்க நாடுகளை விட இலங்கை சிறந்த நிலையில் உள்ளது.

எதிர்கால உணவுப் பாதுகாப்புக்காக, கடந்த ஜுலை மாதம் வழங்கப்பட்ட அவசர ஊட்டச்சத்து திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். அதன்படி, கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளின் போஷாக்குத் தேவைகள் தொடர்பில் நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பில் சுகாதார அமைச்சு முழுப் பொறுப்பைக் கொண்டுள்ளது -என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை முற்படுத்தச் சதி!

## இலங்கை ம.உ. ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 8

கலப்பு (ஐபிரிட்) நீதிமன்றம் ஊடாக, படையினரை சர்வதேச யுத்த குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முயற்சித்து வருகின்றார் -இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், அரசியல் ஆய்வாளருமான பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கலப்பு நீதிமன்ற பொறிமுறை ஊடாக இலங்கைப் படையினரை சர்வதேச யுத்த குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவே ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட், 2015ஆம் ஆண்டு முதல் முயற்சித்து வருகின்றார். அதனால்தான் ஓரிரு இராணுவ அதிகாரிகள் இருந்தாலும், இராணுவ மயமாக்கல் என விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். பிற நாடுகளில் இராணுவ நியமனம் இல்லையா, எதற்காக இலங்கையின் பின்னால் மட்டும் துரத்த வேண்டும்? இராணுவ மயமாக்கலால்தான் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்ற விம்பத்தை உருவாக்கவே இப்படியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.மே 9 சம்பவம், இறுதியாக இராணுவம் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டும், இராணுவத்தினரின் பெயர்களை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தப்படுகின்றது. இந்த சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படும் -என்றார். (ம-44)

# மனித உரிமையை மேம்படுத்த உடன் நடவடிக்கைகள் தேவை!

## இலங்கை அரசாங்கம் முக்கியமான கட்டத்தில் உள்ளது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 8

**மனித உரிமைகள் நல்லிணக்கம் ஆகியவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் தேசிய பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட், கடந்த கால மீறல்கள் மீண்டும் இடம்பெறாமலிருப்பதற்கான பொறுப்புக்கூறல் மற்றும் ஆழமான சீர்திருத்தங்கள் ஆகியவற்றை முன்னெடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஜெனிவா அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இலங்கை தனது அரசியல்வாழ்வின் மிக முக்கியமான கட்டத்தில் உள்ளது. இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் உள்ளது. அது அனைத்துப் பிரிவு மக்களினதும் மனித உரிமைகளில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது பரந்துபட்ட சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான வேண்டுகோள்களை இலங்கையின் அனைத்து தரப்பு மக்களிடமிருந்தும் உருவாக்கியுள்ளது. இதனால் நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது.

பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் ஊழல்கள் போன்ற அடிப்படைக் காரணிகளை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வை காண்பது அவசியம். தற்போதைய சவால்களுக்குத் தீர்வைக் காண்பதற்கும் கடந்த காலமீறல்கள் மீண்டும் நிகழாமலிருப்பதற்கும் அடிப்படை மாற்றங்கள் அவசியம். மிகமோசமான பாதுகாப்பு சட்டங்களை, ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்வதை, இராணுவ மயமாக்கலை நோக்கி நகர்வதை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

பாதுகாப்பு சீர்திருத்தங்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலை முடிவுக்கு கொண்டு வருதல் போன்றவை குறித்த புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பையும் செயற்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (ம)

# பிரிட்டன் பிரதமருக்கு ரணில் வாழ்த்து

பிரிட்டனின் புதிய பிரதமராக தெரிவுசெய்யப்பட்டுள்ள எலிசபெத் ட்ரஸுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையும் பிரிட்டனும் வரலாற்றால் பிணைக்கப்பட்டிருப்பதுடன் நீண்டகால நட்புறவைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பல அமைச்சுப் பொறுப்புக்களை வகித்துள்ள ட்ரஸ்ஸின் முதிர்ச்சியும் அனுபவமும், அவருக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையை நிறைவேற்றுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# செம்மணிப் படுகொலை 26ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்.செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று செம்மணிப் பகுதியில் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி குமாரசாமி கிருசாந்தி உட்பட செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமாக எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-27)



# தமிழ் மக்களுக்குத் தீர்வு சர்வதேச விசாரணையே!

## ரெலோ வலியுறுத்து

கொழும்பு, செப். 8


சர்வதேச நீதிப் பொறிமுறை, சர்வதேச விசாரணை என்பவற்றுக்கு குறைவான எந்த விடயங்களும் தமிழ் மக்களுக்கு தீர்வைத் தராது என்பதில் உறுதியாக இருப்பதாக ரெலோ கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்கான நீதியைக்கோரி இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தின் முன் பாரப்படுத்துமாறு மனித உரிமைப் பேரவையின் பிரதான அங்கத்துவ நாடுகளுக்கும் மனித உரிமை உயர் ஸ்தானிகருக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபையை தூண்டுமாறு கையெழுத்திட்ட கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளோம். இன்று நேற்றல்ல எமது தொடர்ச்சியான நிலைப்பாடு இதுதான்.

சர்வதேச நீதிப் பொறிமுறை, சர்வதேச விசாரணை என்பவற்றுக்குக் குறைவான எந்த விடயங்களும் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தராது என்பதில் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதோடு மாத்திரமல்ல அதற்காக அர்ப்பணிப்போடு உழைத்து வருகிறோம் என்பதை அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிவர்.

அதேபோன்று ஐ.நா. விடயங்களில் மாத்திரமல்லாமல் அன்றாட விடயங்களிலும் தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் அவசர அவசியமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நாங்கள் அக்கறையோடும் செயலாற்றுவோம் -என்றுள்ளது. (ம)



உலக சேவைகள் தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாநகர சபையின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைப் பகுதியை துப்புரவாக்கும் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ச-27)

# 4 நாள்களில் 5 லட்சம் சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, செப். 8

நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 லட்சத்தை கடந்துள்ளது.

கடந்த 4 நாள்களில் இந்த மைல்கல் எட்டப்பட்டுள்ளது என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 4 நாள்களில் இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன் குறித்த காலப்பகுதியில் பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்தும் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அளம்பில் கடற்பரப்பில்

# அத்துமீறி நுழைந்து மீன்பிடி: 12 தமிழக மீனவர்கள் கைது

முல்லைத்தீவு, செப். 8

**இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து முல்லைத்தீவு அளம்பில் கடலில் சட்டவிரோதமான முறையில் கடற்றொழிலில் ஈடுபட்ட 12 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.**



அத்துடன் அவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்திய இழுவைப்படகு மற்றும் மீன்பிடி சாதனங்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர் என மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு அளம்பில் கடல் பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-19)



## குளக்கட்டுப்பகுதியில் பனம் விதை நடுகை

யாழ்ப்பாணம், செப். 8

வவுனியா குளக்கட்டுப்பகுதியில் பனம் விதை நடும் செயற்பாடு சுயாதீன இலைஞர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் வவுனியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பனம் விதை நடும் செயற்பாடு சுயாதீன இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாகவே இந்த ஆண்டும் வவுனியா குளக்கட்டுப்பகுதியில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (ம-14.110)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய தேர் உற்சவத்தை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் 'ஆலய வாழிபாடு' என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

♦ ♦ ♦

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தால் நடத்தப்படும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆல்ய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் ஆற்றவுள்ளார்.

♦ ♦ ♦

இந்து சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' இடம்பெற்று வருகின்றது.

அதன்படி சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்களின் அனுசரணையில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 37ஆவது சொற்பொழிவு நிகழ்வு தாவடி ஸ்ரீ ஆதிகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

'சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை நாவலர்' என்னும் தொனிப்பொருளில் க.ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)



## மணல் கடத்தல் இருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 8

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவரும் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனையை மீறி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவருமாக இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

புத்தூர்கொடிகாமம் பிரதான வீதியின், வீரவாணிப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டனர். அதன் போது அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்தமை தெரியவந்தது. அதனையடுத்து கொடிகாமம்எழுதுமட்டுவாழ் பிரதேசத்தைச் சேர்ந்த டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டார். அத்துடன் அதே பகுதியில் பயணித்த மற்றுமொரு டிப்பரையும் மறித்து சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டு, பரந்தன் உமையாள்புரம் பகுதியைச் சேர்ந்த டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டார். கைதானவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14.23)

## இடியுடன் கூடிய மழை தொடரும்



கொழும்பு, செப். 8

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும். இதன்போது குறித்த மாவட்டங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கு மேல் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும். ஊவா மற்றும் கிழக்கு மாகாணத்தில் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் அவ்வப்போது மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம-14)

## மஞ்சவனப்பதி முருகன் சப்பறத் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 8

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அத்துடன் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் தீர்த்தத்திருவிழா 10 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தாசபை அறிவித்துள்ளது. (ம-14)

## பிறப்புச் சான்றிதழ்கள் டிஜிட்டல் முறைமையில்!

கொழும்பு, செப். 8

இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம் பிறப்புச் சான்றிதழ்களை தற்போது டிஜிட்டல் வடிவில் வழங்கி வருகிறது என பதிவாளர் நாயகம் ஜெனரல் பிரபாத் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த வருட ஓகஸ்ட் முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்த மற்றும் பிறக்கும் குழந்தைகள் டிஜிட்டல் வடிவிலான பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவார்கள். குழந்தை 15 வயதை அடையும் போது, டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழில் அவர்களின் பெயருக்கு அடுத்ததாக பட்டியலிடப்பட்ட எண் அவர்களின் தேசிய அடையாள அட்டை எண்ணாக இருக்கும். தற்போது ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வருட இறுதியில் நாடு முழுவதும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் - என்றார். (ச-இ)

## குருதிக்கொடை

மக்கள் வங்கியின் 61 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு 'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் மக்கள் வங்கி யாழ். பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் இணைந்து குருதிக் கொடை நிகழ்வொன்றை கொடிகாமம் மக்கள் வங்கி கிளையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நடத்தவுள்ளன. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நிபந்தனைகளை அம்பலப்படுத்துங்கள்!

ஒருபுறம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, மறுபுறம் சர்வதேச நாணய நிதியம் என்று இலங்கை இரு பக்கங்களாலும் சர்வதேசப் பிடிமானத்துக்குள் சிக்கியிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதாக இருந்தாலும் சரி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தனக்கு எதிரான 'இரும்புப் பிடியில்' இருந்து ஓரளவேனும் விடுபடுவதாக இருந்தாலும் சரி, இந்த மாதம் இலங்கைக்கு மிகவும் தீர்க்கமான தொன்று. இவ்வாறாக இலங்கை தொடர்பில் ஏற்பட்டிருந்த விவாதக்களம் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகள் மீதான வெளிப்படைத்தன்மையை அடுத்து, மேலும் பரபரப்பாகியிருக்கின்றது – பூதாகரமாகியிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த இரு வாரங்களாக உடும்புப் பிடியாக நிற்கின்றது. ஹர்ஷ டி சில்வா, சஜித் பிரேமதாஸ இருவரும் இந்தத் 'தார்மீகக் கோரிக்கையை' மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தனர். நாடாளுமன்றத்தில், நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் குறித்தான தகவல்கள் பாரப்படுத்தப்பட வேண்டும் என அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். ஆனால், 'நாணய நிதியத்தின் ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வரையில், அது குறித்த தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட மாட்டாது' என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க.

இலங்கை இதுவரை பல தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றிருக்கின்றது. அப்போதெல்லாம் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. எனில், இப்போது ஏன் ஒப்பத்தின் வெளிப்படைத்தன்மை குறித்த விவாதத்துக்கு உட்படவேண்டும்? என்பது ஆளுநரின் கேள்வி. சில விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படும்போது அவை விவாதத்துக்கு உட்படும். அந்த விவாதங்கள் ஆரோக்கியமாக இருந்தால், குறித்த விடயத்தின் மீதான நடவடிக்கைகள் இன்னுமினும் நேர்த்தியாக இடம்பெறும். ஆனால், அவ்வாறு வெளிப்படுத்தப்படும் விடயம் அரசியலாக மாறினால், வில்லங்கத்துக்கு விமர்சிக்கப்பட்டால் அது நெடுங்காலப் பின்னடைவை ஏற்படுத்திவிடும். அந்த வகையில் மத்திய வங்கியின் ஆளுநருடைய தயக்கத்தை ஏற்கலாம். அதுதான் இராஜதந்திரம். அதில் தவறொன்றும் இல்லைதான்.

ஆனால், இலங்கை இதுவரையும் நாணய நிதியத்தை நாடிச் சென்றமைக்கும் இப்போதைய நிலைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இம்முறை நாட்டைப் பூச்சிய நிலையில் இருந்து கட்டியெழுப்ப வேண்டியிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்தும் பட்சத்தில், அரச ஊழியர்களின் வேலையிழப்பு, இலவசக் கல்வி மற்றும் இலவச மருத்துவம் சவாலுக்கு உட்படுதல், அரச நிவாரணங்கள் இல்லாமல் போகும் சாத்தியம், வரி ஏற்றத்தால் வாழ்கைச் செலவு பாரதூரமாக உயர்தல், அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதால் உண்டாகக்கூடிய சிக்கல்கள் என பல்வேறு பிரச்சினைகளை இந்தத் தீவு சந்திக்க வேண்டியிருக்கும். அதேவேளை, நாணய நிதியத்தின் உதவிகளையும் கட்டாயம் பெற்றேயாகவேண்டிய நிலை.

வெறும் 4 பில்லியன் டொலர் தானே நாணய நிதியத்தால் கிடைக்கும் என்று இளக்காரத்தோடும் நடக்க முடியாது. ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் கிடைக்கும் நேரடி உதவிகளை விடவும், மறைமுக இலாபங்கள் அதிகம். சர்வதேச நாணய நிதியம் ஒரு நாட்டுக்கு கடன் கொடுத்தால், அந்த நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து கழுகுப்பார்வையோடு இருக்கும். எனவே அந்த நம்பிக்கையில் ஏனைய தரப்புகளும் இலங்கைக்கு பயமில்லாமல் தாராளமாக உதவி செய்ய முன்வரக்கூடும். இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சங் 'இனிமேல் இலங்கைக்கான எமது உதவிகளை மும்மடங்காக, நாணய நிதியத்தினூடாக வழங்க இருக்கின்றோம்' என்று கூறியிருந்தார். இதுபோல நிறைய உதவிகள் சர்வதேச நாணய நிதியத்தின் புண்ணியத்தில் கிட்டுமென்பதிலும், இப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அவையே மருந்தாகும் என்பதிலும் சகல நிபந்தனைகளுக்கும் இலங்கை கட்டுப்பட்டேயாகவேண்டும். இதனால், நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் ஒருவிதப் பரபரப்பு நிலையோடு அத்தனை இலங்கையர்களையும் ஆட்கொண்டிருக்கின்றது.

இந்தப் பதற்றம், அச்சம், ஏக்கம், பரிதவிப்பு என்பனவெல்லாம் ஒன்றுசேர்ந்துதான் நாணய நிதியத்தின் ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறக் காரணமாகியிருக்கின்றன என்ற குறைந்தபட்சப் புரிதலை அரசாங்கமும் மத்திய வங்கியின் ஆளுநரும் முதலில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தப் கோரிக்கையின் பின்னரான நியாயப்பாட்டை – தார்மீக உரிமையை – அவர்கள் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தை பரகசியப்படுத்தும் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

திரைமறை நகர்வுகளும் – மறைகரங்களும்தான் – இந்த நாட்டை அனைத்து வகையிலும் சின்னாபின்னமாக்கிப் படுகுழிக்குள் தள்ளக் காரணமாயின. இந்த சகதிப்போக்கும் நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துடன் புத்துயிர்ப்புப் பெற[illegible]

நாளொரு நல்வார்த்தை

"வெற்றி என்பது குறிக்கோள் அன்று. அது ஒரு பயணமே! பயணம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கவேண்டும்" - ஆர்ஷேவிட்




### இலங்கைக்கு எதிராக

# ஐ.நா.வில் முதல்முறையாக பொருளாதாரக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 8

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு எதிராக முதல் தடவையாகப் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகின்றது. இதில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்தப் பிரேரணை தற்போது வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று கடந்த 12 மாதங்களில் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசுக்கு முடியாமல் போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

புதிய பிரேரணையில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக முதல் தடவையாக பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டை வைத்திருக்கின்றது. இதற்கு முன்னர் ஒருபோதும் இவ்வாறான குற்றச்சாட்டை இலங்கைக்கு எதிராகத் தெரிவித்ததில்லை. அரசாங்கம் நிதி மோசடி செய்துள்ளதை சர்வதேச நாடுகள் சந்தேகிப்பதே இதற்குக் காரணமாகும்' - என்றார். (ம-இ)

# இரகசிய ஒப்பந்தங்களுக்கு மக்கள் பொறுப்பேற்கார்

### ஆளுநரின் கருத்துக்கு சஜித் பதிலடி

கொழும்பு, செப். 8

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நாட்டு மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். இரகசியமாக கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களுக்கு நாட்டு மக்களால் இழப்பீடு வழங்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினர், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், அந்த ஒப்பந்தம் உடனடியாக நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தப்படாது என்று தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர், ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் போது அது வெளிப்படுத்தப்படும் என்று பதில் வழங்கியுள்ளார். இந்த நிலையிலேயே, 'இரகசியமாக கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களுக்கு நாட்டு மக்களால் இழப்பீடு வழங்க முடியாது' - என்று சஜித் தெரிவித்துள்ளார். (ம)

நாளை

09.09.2022
வெள்ளிக்கிழமை
ஆவணி 24

சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34 - 12.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கேள்வி அறிவித்தல்

**இல.127, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் கட்டடத்தில் உள்ள மலசலகூடம் திருத்தம் மற்றும் சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் வெளிப்பக்க , உட்பக்க சுவருக்கு வர்ணம் பூசுவதற்கான கேள்வி கோரல்.**

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இல. 127. கே.கே. வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள கட்டடத்தின் மலசல கூடம் திருத்தம் மற்றும் உட்பக்க வெளிப்பக்க சுவருக்கு வர்ணம் (பெயின்ட்) பூசுவதற்குமான கட்டட ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றது. கட்டடத்தின் மலசல கூடம் திருத்தம் மற்றும் உட்பக்க வெளிப்பக்க சுவருக்கு வர்ணம் (பெயின்ட்) பூசுவது தொடர்பான விபரத்தினை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டடத்தைப் பார்வையிட விரும்புவோர் மற்றும் ஏனைய விபரங்களை சங்க தலைமைக் காரியாலயத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடன் (021 222 2587) அலுவலக நேரத்தில் திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும். சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரையிலும் தொடர்பு கொண்டு பார்வையிடமுடியும்.

விணணப்ப முடிவுத் திகதி :- 23.09.2022

விண்ணப்பிக்கும்முறை -:

மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்கில் ரூபா 1000.00 இனை செலுத்திப் பெற்று, கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **"இல 127 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் கட்டடத்தில் உள்ள மலசலகூடம் திருத்தம் மற்றும் சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் வெளிப்பக்க . உட்பக்க சுவருக்கு வர்ணம் பூசுவதற்கான கேள்வி கோரல் "** எனக்குறிப்பிட்டு **தலைவர். யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது. இல 127. காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.** எனனும் முகவரிக்கு 2022.09.23 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்.**
**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

## KP CONSTRUCTION

- சிற்ப, கட்டட அலங்கார வேலைகள்
- 3D பெயின்றிங், ஓவியங்கள், வரவேற்பு வேலைபாடுகள்
- நிலகல்லு பதித்தல், துளசி மாடங்கள், சிலைகள் அமைத்தல்
- வயறிங், பிளம்பிங், வெல்டிங் வேலைகள்

மிக குறைந்த செலவில் தரமான வேலைகள் செய்துதரப்படும்

**076 126 7927, 077 430 6910**



## ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
## ஏகாதசருத்ரஹோமம்

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் ஏகாதசருத்ரஹோம வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

### கிரியாகால நிகழ்வு

10.09.2022 சனி பிற்பகல் 3.30 மணியளவில் கணபதி ஹோம வழிபாடுகள் இடம்பெறும்.

11.09.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவிலிருந்து 11.30 மணி வரை ஏகாதசருத்ரஹோம வழிபாடுகள் இடம்பெறும்.

**வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**
**களபாவோடை,**
**வசந்தபுரம், ஏழாலை தெற்கு.**

(CS 46398)(3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1929

மறைவு 05 . 09 . 2022



திருமதி
## ஆறுமுகம் இராசலட்சுமி (சின்னமணி)

யாழ்.நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் இராசலட்சுமி (சின்னமணி) கடந்த (05.09.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சிவகொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் பார்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் பாலசிங்கம் (கனடா. முன்னாள் உதவி அரச அதிபர். யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு சகோதரியும் அருணாவதி (பிரான்ஸ்). காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் மங்களேஸ்வரி (டென்மார்க். முன்னாள். தாதியர் யாழ்.போதனா வைத்தியசாலை). காலஞ்சென்ற ஸ்ரீதரன். மற்றும் சாந்தினி (பிரான்ஸ்). சிவநேசன் (லண்டன்). அருள்நேசன் (லண்டன்). அருள்மணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகரத்தினம் (பிரான்ஸ்). குகதாசன் (டென்மார்க்). வனசரஞ்சன் (பிரான்ஸ்). யோகராசா. விக்னேஸ்வரி (ராணி. லண்டன்). கயல்விழி (லண்டன்). சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவரூபன். இரட்ணசீலன். சண்முகப்பிரியா. சுபாசினி. சுகிர்தா. தசாளினி. பிரதீப். நிவேதா. பிரசாந். சஸ்மிதா. சுமிதா. யனோஜன். ஜெனித். யதீஸ். தனுஷ். சஞ்சை. பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜெனி. ஜெசி. கவிசான். வைரா. சிந்துரூபன். கிரிசாந். சஜிலோஜன். சதுர்சிகா. நிவேதன். நிகிர்தா. ஓவியா. நிலா. கவின். அபிரா. அகல்லியா. தியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2022) அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**86, அம்பாள் வீதி,**
**நாயன்மார்கட்டு.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 445 4686**

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவு
## அஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 26 – 07 – 1968

இறப்பு 10 – 08 – 2022



*இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம்*
*ஆகவே நீ எனக்கே சொந்தம். (எசாயா 43:1*

## அமரர் சிமியோன் சாமுவேல் ஜோன்சன்
**(சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம்**

கடந்த 10.08.2022 அன்று மரணமடைந்த செய்தி கேட்டு ஆறுதல் கூறியும் நேரில் வந்து மரண சடங்கில் கலந்து இறுதி ஆராதனையிலும் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் திருப்பலியை நடத்திய பங்குத் தந்தை அவர்களுக்கும் எமது நன்றிகள்

வைத்தியசாலையில் சுகவீனமுற்றிருந்த காலத்தில் பணிபுரிந்த வைத்தியர் கள், தாதியர்கள், வைத்திய சாலை ஊழியர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர், உதவிப்பதிவாளர்கள், விரிவுரையாளர்கள், துறைத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் மருதனார் மட பல்கலைக்கழக ஊழியர்கள், நண்பர்கள், வவுனியா பல்கலைக்கழக பதிவாளர் அவர்களுக்கும் கிருபாரட்ணம் அன் கோ நிறுவன பட்டையக் கணக்காளர்கள் மற்றும் யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை/ யூனியன் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர் களுக்கும் எமது நன்றிகள். சுன்னாகம் அந்தோனியார் பங்கின் மைந்தர்கள் மற்றும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரி வித்தோர், வெளிநாட்டிலும், வெளியூரிலும் இருந்து தொடர்பு கொண்ட அன்புள்ளங்களுக்கும் நன்றிகள்.

நாளை 09.09.2022 அன்னாரின் 31ஆம் நாள் ஆத்மசாந்தி திருப்பலி காலை 5.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப் படும் திருப்பலியிலும் அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் சிரம் தாழ்த்தி அனைவரையும் அழைத்து நிற்கின்றோம். **இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**குடும்பத்தினர்**
**076 375 1488 (மகன்)**
**077 117 4954 (மைத்துனர்)**

**தெற்கு வீதி,**
**சுன்னாகம்.**

(CS 20660 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சு வேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281**

## வேலையாள்கள் தேவை

A9 றோட் முறிகண்டியில் இயங்கும்

**சைவ உணவகத்திற்கு**

பின்வரும் வேலையாள்கள் தேவை.

- காசாளர்
- சிட்டை எழுதுனர்
- உணவு உற்பத்தியாளர்
- உணவு பரிமாறுபவர்
- உணவு பொதிசெய்வோர்
- சுத்திகரிப்பாளர்

போன்ற பதவிகளுக்கு ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

(cs.35805) (2.6)

**077 386 6250**

## பெயர் மாற்றம்

637 /1, சக்தி வீதி, அன்புவழிபுரம் எனும் முகவரியை வதிவிடமாக் கொண்ட **பழனி புஸ்பவதி** என்ற எனது பெயரினை **பழனி புவனேஸ்வரி** என மாற்றிக் கொள்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக அறியத்தருகின்றேன்.

(Ne.930) (2.6) த. புவனேஸ்வரி

## தேவை

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறையில் இயங்கும் யாழ் - கொழும்பு பஸ் சேவை பொதிகள் சேவை கிளை அலுவலகத்திற்கு **அலுவலக உதவியாளர்** உடன்தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

(cs.20670) (2.6)

**076 009 4946**

## 50 ஆவது வருட திருமணநாளைக் காணும்

உரும்பிராய் கிழக்கு,

**விவேகானந்தன் - கருணேஸ்வரி**

தம்பதிகளுக்கு

உரும்பிராய் வடக்கு, கருணாகரன் - தெய்வநாயகி குடும்பத்தினரின் மனமுவந்த வாழ்த்துக்கள்




உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானம், தளபாடங்கள் தொட்டு, கற்பகனின் கல்யாண மண்டபம், ஆலயத்தில் அழகு மிளிர் சிற்பங்களை யும் சித்திரங்களையும் மிக மிக நேர்த்தியாக உலகோர் மெச்சும்படி தன் சொந்தச் செலவில் செய்துமுடித்த அருட்பணிசெம்மலே நீவீர் குடும்ப சமேதராக நூற்றாண்டு விழாக்கண்டு மண்ணில் நோய் நொடி இன்றி வாழ கற்பகனின் பாதம் பணிந்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்க வளர்க தொடர்க நின் பணி என வாழ்த்தும்

கருணாகரன் (கருணை) குடும்பம்

உரும்பிராய் வடக்கு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




பேராதனை பல்கலைக் கழகத்தில் 30.08.2022 அன்று நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் வளன்புரம் கொழும்புத்துறையைச் சேர்ந்த **மேரி டெக்சி** மற்றும் **நடராஜா** தம்பதியினரின் மகளான

**ஸ்ரீவித்தியா நடராஜா**

மருத்துவத்திற்கான இளங்கலை மாணி பட்டத்தை பெற்றதுடன் Surgery மற்றும் Operative Surgery காக இரண்டு தங்கப்பதக்கங்களையும் மற்றும் அறுவைச் சிகிச்சைக்கான Barrkumara Kulasinghe நினைவு பரிசையும் பெற்றுள்ளார். இப் பட்டங்களை பெற்றமைக்காக இறை ஆசி வேண்டி இவரை வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: N. சொரூபன் குடும்பம்
யோசப்பாலா குடும்பம்
உறவினர்கள், நண்பர்கள்.

(cr.38023) (2.6)

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா



## விஞ்ஞாபனம் - 09.09.2022

உமையவள்தன் பாலகனார் தேரிலேறி
உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்
பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி
சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்
கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில்

**நாளை (09.09.2022) வெள்ளிக்கிழமை** எல்லாம் வல்ல

**கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா**

வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது



அதிகாலை 5.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து காலை 08.00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம் பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்துகொண்டு எம் பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள் கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி கலந்துகொண்டு எம்பெருமானின் திருவருட் கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**

(cr.38023) (2,6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| ஜனனம் | மரணம் |
|---|---|
| 17 . 03 . 1938 | 20 . 08 . 2021 |



அமரர் திருமதி

# பாலசிங்கம் நல்லம்மா

ஏங்கள் குலவிளக்கு, மொந்திபுலம், காரைநகர்

ஓராண்டு சென்றுவிட்டது மாமி !
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்,
வாழ்வின் நல்ல வழிகாட்டியாய்
வாழ்ந்த நீங்கள்
இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகளுடன்

மருமகன் யோகன்,
மொந்திபுலம், காரைநகர்

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 11 . 1937 | 06 . 09 . 2022 |



# நவரட்ணம் செல்வராஜா

(இளைப்பாறிய பிரதம வருமான வரி நிர்வாக உத்தியோகத்தர்
யாழ். மாநகர சபை முன்னாள், அனர்த்த முகாமைத்துவ
ஒருங்கிணைப்பாளர், யாழ் மாவட்ட செயலகம்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் செல்வராஜா கடந்த (06.09.2022) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் ஹண்ட் - அமிர்தம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான புளோராநல்லம்மா, சோமசுந்தரம், செல்வநாயகம், குணராஜா (கனடா), Dr. ஜெயராஜ் (ஜேர்மனி) மற்றும் றோசம்மா பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (08.09.2022) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"மகிழ்வாசா"
டச்சுவீதி,
சண்டிலிப்பாய்.

தகவல் :
B.D. ஜீவபாலன் (மருமகன்)
077 710 9096

(CS 46422)(3/6)

## வவுனியாவில் அதிக மழைவீழ்ச்சி பதிவு

வவுனியா, செப். 8

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடம் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் 931.2 மில்லி மீற்றர் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. குறித்த காலப்பகுதியில் ஏப்ரல் மாதத்திலேயே அதிகளவாக 356.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் பெய்த மழைவீழ்ச்சி 667.1 மில்லி மீற்றராகக் காணப்பட்டது. கடந்த வருடம் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒப்பிடும்போது இந்த வருடமே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது -என்றார்.

(ச-110)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 . 10 . 1954 | 07 . 09 . 2022 |



# அமரர் கந்தசாமி குணரட்ணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடா (EAGLESTONE LANE BARRIE ONTARIO, CANADA வை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குணரட்ணம் (பபி) நேற்று (07.09.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், மாசிலாமணி அவர்களின் அன்புக் கணவரும், யதுநந்தன் (கனடா), துஷ்யந்தன் (கனடா), துஷ்யந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமென்டா (கனடா), நீரஜா (கனடா), ரஞ்சித் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி அருளானந்தம், சதானந்தம், நித்தியானந்தம், பரமானந்தம் மற்றும் செல்வரத்தினம் (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அணிக்கா, ஈர்த்தன், அக்ஷே, அபினா, ரியானா, ஏற்றியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

76/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
தவானந்தன் - 077 028 0950
பிரேம்குமார் - 077 6040 543

(cs20671) (2.6)

## INVITATION FOR BIDS (IFB) STILL PHOTOGRAPHY FOR 36th GENERAL CONVOCATION (PART I) – 2022

1. **The Chairman, Procurement Committee** of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography to cover **36th General Convocation (Part I) - 2022 of the University of Jaffna** which is scheduled to be held on 6th, 7th and 8th of October, 2022.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the **Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs. Contact number: 021 2219201
4. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Registrar, Capital Works and Planning Branch, University of Jaffna until 22nd September 2022, from 09.00 hrs to 15.00 hrs upon payment of a non-refundable fee of Rupees two thousand (Rs.2000/-) to be deposited to the Peoples Bank, University of Jaffna **with the Reference No. "970000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip.
   Bidding document and other details will be available in the University website www.jfn.ac.lk.
5. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reach on or before 10.00 am on 23rd September, 2022. Bids will be opened soon after closing at 10.00 am on 23rd September, 2022 at the Capital Works & Planning Branch in the presence of the bidders' representatives who choose to attend.
6. Bids shall be valid at least for a period of **60 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna"**
   - For a amount of **Rs. 15,000/=**
   - Issued by one of the agencies (Banks) acceptable to the client.
8. Pre Bid meeting will be held on 19th September, 2022 at 10.00 am in the Capital Works & Planning Branch, University of Jaffna.

**Vice Chancellor,
University of Jaffna,
Thirunelvely, Jaffna.
06.09.2022**

**(cr.38024) (2.6)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 05 - 1945



இறப்பு 07 - 09 - 2022

### திருமதி சிவானந்தமலர் விக்கினேஸ்வரன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தமலர் விக்கினேஸ்வரன் அவர்கள் நேற்று (07.09.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிந்தாமணி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் விக்கினேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேசன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கதிர்காமநாதன், புனிதவதி, சுகிர்தலட்சுமி மற்றும் நித்தியலட்சுமி, மகேசன், சிற்சபேசன், சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் யமுனா (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஐங்கரன் (Dewmas) ஆகியோரின் அன்பு தாயாரும் மகேந்திரனின் (கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணம்) அன்பு மாமியும் கேசரனின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுதுமலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரது பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் : விக்கினேஸ்வரன் (கணவர்)
021 225 6823
077 638 6326
மகேந்திரன் (மருமகன்)
077 390 5115

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 07 . 1960



மறைவு 06 . 09 . 2022

### சரவணமுத்து தவராசா

(மின்னிணைப்பாளர் லங்கா சீமெந்து Ltd)

சீனியர் ஒழுங்கை கலட்டியை பிறப்பிடமாகவும் முதலிகோவில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தவராசா (மின்னிணைப்பாளர் லங்கா சீமெந்து Ltd) 06.09.2022 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சிவக்கொழுந்து தம்பதியரின் தவப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனி (ஓய்வுபெற்ற ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் தவரூபி, சபேசினி, தவநிசா, மலரவன், காலஞ்சென்ற மஞ்சுசா ஆகியோரின் தந்தையும் ஞானசீலன், ஜெயகரன், கேதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற திருமதி ஜெயந்தி செல்வநாதனின் சகோதரனும் யாதவன், பபிசன், வர்ஷா, றொபிஷா, றொஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2022) வியாழக்கிழமை அன்னாருடைய இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

முதலி கோவில் ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 11 - 1930



இறப்பு 05 - 09 - 2022

### அமரர் முருகேசு செல்லமணி

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், நெடுங்கண்டல் அடம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.முருகேசு செல்லமணி அவர்கள் (05.09.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற முருகேசு, நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம், முத்தம்மா தம்பதிகளின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி,லோகேஸ்வரி, சோமநாதன், இராஜேஸ்வரி, , கனகராஜா (கணேஸ்), ஆகியோரின் மைத்துனரும், மனோகரன் (கனடா), காலஞ்சென்ற பிரபாகரன், திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சுதாகரன் (வீதி அபிவிருத்தி திணைக்களம்), கலைச்செல்வி (லண்டன்), ஜெயபாஸ்கரன் (லண்டன்), ஞானசேகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், ரஜனி, மணிமாலா, சிமித்திரா, சிவானந்தன், சந்திரமோகன், சுபாங்கி (கீதா) ஆகியோரின் மாமனாரும், நிவேதா, சுவேதா, சபேஷ்குமார், சஜிக்கா, மனோஜ்குமார், மயூரன், கிருஷாந், டில்ருக்ஷன் (தினேஷ்), சாரண்யா, ஷர்மிளா, தனேந்திரன், தர்ஷனா, கனுஷனா, விதுஷன், ஜனனி, அஷ்வினி, அஷ்வின் ஆகியோரின் பேரனும் தேஷாயினி, ஐஸ்வரி, கார்த்தி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (09.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருக்கேதீச்சரம் நல்ல தண்ணீர் பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 - 05 - 1968



மறைவு 07 - 09 - 2022

### கதிரித்தம்பி சிவபாலன்

ஆலடி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் நவாலி றோட் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி சிவபாலன் நேற்று (07.09.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி மகேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் விஜயலக்சுமியின் அன்பு மருமகனும், இராஜநங்கை (ஜெயந்தி-யா/மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப் பாடசாலை, ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், சிந்துஜன் (NDB வங்கி), விதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரஸ்வதி, காலஞ்சென்ற பத்மாவதி, கலாவதி, சிவநாதன் ஆகியோரின் சகோதரனும் கனகரத்தினம், சதாசிவம், காலஞ்சென்ற துரைசிங்கம், ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும், அருள் நங்கை (நிர்வாகி புதிய உயர் கல்லூரி), பாலபாஸ்கரன், கமலாம்பிகை (பிரான்ஸ்), காலஞ்சென்ற அருள்வேல், செந்தில்குமார், சண்முகநாதன் மற்றும் ராகினி, செல்வரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணிக்கு பூதவுடல் கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 541 7385

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவு நிறுத்தம்: விவசாயிகள் அந்தரிப்பு

## அறாவிலைக்கு விற்கும் நிலை என்றும் அவர்கள் ஆதங்கம்!

கிளிநொச்சி, செப். 8

நெல் கொள்வனவு சபை கொள்வனவை நிறுத்தியுள்ளதால், கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்டுள்ள நெல்லை சரியான விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என கிளிநொச்சி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டம் முதன்மையாகக் காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் 28 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரம், எரிபொருள் போன்ற பல்வேறு தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நாம் சிறுபோக செய்கையை மேற்கொண்டு 32ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை அறுவடையாக பெற்றுள்ளோம். இது கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவான அளவே.

ஆனால், தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில், பொருளாதார மத்திய நிலையம், கண்டாவளை நெற்களஞ்சியசாலைகள் நெல்லை கொள்வனவு செய்வதாக அறிவித்த போதும் நெல் கொள்வனவுசபை விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவை நிறுத்தியுள்ளது.



இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்கள் நெல்லுக்கான விலையை வீழ்த்தி மிகக் குறைவான விலையில் நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. நெல்லை நாங்கள் அறாவிலைக்கு கொடுப்போமாக இருந்தால் இனிவரும் காலபோக நெற்செய்கையை முழுமையாக கைவிடவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே அரசாங்கம் நியாயமான விலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய முன்வரவேண்டும் - என்றனர்.

(ச-19)

## மரண அறிவித்தல்



**வீரகத்தி சுப்பிரமணியம்**
**(பிரபல ஓவியர் தவம்)**

வடமராட்சி கரவெட்டி மத்தி தச்சந்தோப்பு ஒழுங்கையைச் சேர்ந்த வீரகத்தி சுப்பிரமணியம் (ஓவியர் தவம்) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் நெல்லியடி அந்திராணைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரகத்தி - வள்ளியம்மை தம்பதியரின் இளையமகனும் நெல்லியடி வர்த்தகர் காலஞ்சென்ற சகோதரம் சின்னையா - சீதேவி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற இலக்சுமியின் அன்புக் கணவரும் நவநீதன் (ரமேஷ் - லண்டன்), கலைமகள் (சுதா), கல்பனா (லதா), கார்த்திகா (சீதா-லண்டன்), கௌசல்யா (ராதா) ஆகியோரின் அருமைத் தந்தையும் நிஷாந்தன் (லண்டன்),சமன் நிஷாந்த, உப்புலி மாலதிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சச்சின் (லண்டன்), அனுஷ்கா, அனிற்கா (லண்டன்) தேஷ்னா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு, குமாரு, கிருஷ்ணர், தெய்வநாயகி மற்றும் சபாபதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தச்சந்தோப்பு ஒழுங்கை இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர் 076 6466319

### சரத்...

உறுப்பினர்களுக்கு கொழுப்புப் பிரச்சினை- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிள்ளைகள், தாய்மாரின் மந்த போஷணை தொடர்பாக யுனிசெப் நிறுவனம் விடுத்திருக்கும் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தென்பகுதியில் உள்ளவர்களை விடவும் போஷாக்கற்ற நிலைமை தொடர்பில் நாம் நன்கு அறிவோம். நாம் அதற்குள் வாழ்ந்தவர்கள். அதனால் இப்போதும் பாதிக்கப்பட்டுள்ளவர்கள். இப்போது நீங்கள் இதுதொடர்பில் பேசுவதில் மகிழ்ச்சி.

போஷாக்கற்ற நிலையால் மக்களும் சிறுவர்களும்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், இங்குள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழுப்புப் பிரச்சினை. அதனால் அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். பலர் இங்கு இனவாதம் பேசுகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீர சேகர ஓர் இனவெறியர். அவர் விவாதத்துக்குரிய தலைப்பில் பேசாது குருந்தூர் மலை தொடர்பில் பேசும்போது மௌனிகளாக இருந்த சில,ர் நான் அந்த விடயம் தொடர்பில் பேசும்போது விவாதத்தின் தலைப்புக்கு முரணாகப் பேசுவதாகக் கூறுகின்றனர்.

குருந்தூர் மலை விடயத்தில் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். எமது உயிரைக்கொடுத்தாவது ஆக்கிரமிப்பைத் தடுப்போம்- என்றார்.

(அ-எ-22)

### சிறிலங்காவின்...

பெற்ற பகுதிகளைச் சுட்டிக்காட்டும் வரைபடமொன்றை கனடாவைச் சேர்ந்த பொதுநல பரப்புரை நிலையம் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவில் இடம்பெற்ற ஆயிரக்கணக்கான மனித உரிமை மீறல்களை திகதிகள், பாதிக்கப்பட்ட நபர்களின் பெயர்கள், அவை நடைபெற்ற இடம் போன்ற விவரங்களுடன் இந்த வரைபடம் காணப்படுகின்றது.

இந்த வரைபடம் மனித உரிமை மீறல்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் தொடர்பான ஐ.நா.வின் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்கு அவசியமான அடிப்படை ஆதரவை வழங்குகின்றது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது சிறிலங்காவின் அண்மைய அரசியல், பொருளாதார நெருக்கடிகள் அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் பொறுப்புக்கூறல்கள் இல்லாததை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலை வெளிப்படையாக அவதானிக்கலாம். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் உண்மை 'நீதி மற்றும் இழப்பீட்டுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51ஆவது அமர்வுக்கு முன்னதாக சிறிலங்காவின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியாகியுள்ள இந்தத் தருணத்தில், மோதல்கள் தொடர்பான இந்த வரைபடம் மனித உரிமை மீறல்களின் அளவு பரவலான தன்மை, பொறுப்புக்கூறலின் அவசியம் போன்றவற்றை உரிய நேரத்தில் நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

வரவேற்கத்தக்க விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கடந்த வருடத் தீர்மானம், பொறுப்புக்கூறலை முன்னகர்த்துவதற்காக சிறிலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை ஆராய்ந்து சேகரித்துவைப்பதன் அவசியத்தை அங்கீகரித்திருந்தது.

சிறிலங்காவின் பொறுப்புக் கூறலுக்கான சாத்தியக்கூறுகள் இல்லாததால் இந்த ஆணையை தொடர்வதும் மேலும் விஸ்தரிப்பதும் அவசியமானது.

தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும் அதேவேளை இன்னமும் பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது என்பதை மனித உரிமை ஆணையாளரின் அண்மைய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த மோதல் வரைபடம் சர்வதேச மட்டத்தில் பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கும், தங்கள் சொந்த உத்திகளை பின்பற்றுவதற்கும் ஐ.நா. மற்றும் உறுப்புநாடுகளுக்குத் துணைபுரியும் -என்று தெரிவித்துள்ளது.

(அ-எ-இ)

உயர்கல்வி மற்றும் தொழில்வழிகாட்டல்
**கருத்தரங்கு**

இம் முறை A/L பரீட்சைக்கு தோற்றி பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் தொழில்வழிகாட்டலுக்கான மாபெரும் கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது

அனுமதி இலவசம்

க.பொ.த (உ/த) பரீட்சைகளில் 3 பாட சித்தி பெற்ற மாணவர்களுடன் ஒரு பாடம் அல்லது இருபாடம் சித்தி பெற்ற அனைத்துத்துறை மாணவர்களும் பயன்பெற முடியும்.

யாழ்.நகரில் சனிக்கிழமை (10.09.2022) 10.00 AM இற்கு ஆரம்பமாகவுள்ளது.



பங்குபற்றுவோர் 09.09.2022 இற்கு முன்னர் உறுதிப்படுத்தவும்.

மேலதிக விபரங்களுக்கு
e-mail: careerguid45@gmail.com
076 378 4109 முகாமைத்துவ சபை

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர்**

தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி (B.A) தமிழியல் (Tamilology) சிறப்புப்பட்டம்!



- தொழில் வாய்ப்பா? பதவியுயர்வா? அனைவரும் விண்ணப்பிக்கலாம்.
- க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி (பழைய பாடத்திட்டம் 4 பாடங்களில்)
- உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப் படிப்பைத் தொடர முடியும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.

2022 - 2025 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள் செப்டெம்பர் மாத இறுதியில் ஆரம்பமாகும்.

பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித் திகதி 20.09.2022 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில்
தமிழ் இணையக்கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
A9 வீதி, புளியங்குளம்.
071 315 6109

யாழ்ப்பாணத்தில்
தமிழ் இணையக்கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
077 805 1173

(CR 38018) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

பார் என்று மறைமுக எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சிறுவர் மற்றும் தாய்மார்களின் மந்த போசணை தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஓகஸ்ட் 31 ஆம் திகதியன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற ஒருவர் முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாரையின் விகாராதிபதி சட்டவிரோத நிர்மாணத்தை மேற்கொள்கின்றார் என்று தெரிவித்து பொய்யான தகவலை நாடாளுமன்றத்துக்கு அறிவித்து, நாடாளுமன்றத்தையும் மக்களையும் தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளார்.

தொல்பொருள் அகழ்வுப் பணிகளை நிறுத்துவதற்கான தீய எண்ணத்துடனேயே அவர் அவ்வாறு கூறியுள்ளார். முல்லைத்தீவு நீதிவான் அந்த நிர்மாணத்தை நிறுத்துவதற்கு உத்தரவு வழங்கியிருந்தார். அதன் பின்னர் பொலிஸார் நகர்த்தல் பத்திரமொன்று மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளுடன் அந்த இடத்துக்குச் சென்று அவதானித்து அந்த வழக்கை நீக்கிக் கொண்டுள்ளனர்.

இதன்படி தொல்லியல் திணைக்களத்துக்கு அதனைப் பராமரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

குருந்தூர் அசோக விகாரை என்பது 2 ஆயிரம் வருடங்கள் வரையில் பழமையான பௌத்த விகாரை தொகுதியாகும். தீபவம்சம் மற்றும் மகாவம்சத்துக்கு அமைய குருந்தூர் மலை உண்மைக் கதையை எழுதிய வரலாற்று இடமாகும். அங்கு அகழ்வுகளின்போது புத்தர் சிலைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. ஆனால், அங்கு எந்த இடத்திலும் இந்து ஆலயம் இருந்தமைக்கான சாட்சியம் இல்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்று நடந்த சம்பவத்துக்கு வெட்கப்பட வேண்டும்.

இங்கு புனித சின்னங்களை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு ஜுன் 12 ஆம் திகதி நடைபெற்றது. அதில் பௌத்த பீடங்களின் நாயக்க தேரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் குண்டர் குழுக்களுடன் சென்று அதைக் குழப்பினர். மலர் ஒன்றை வைத்துக்கூட பூஜை செய்ய முடியாத வகையில் பிக்குகள் திரும்பியிருந்தனர்.

இந்த பௌத்த நாட்டில் பௌத்த சாசனத்தை அவமதிக்கும் வேலையைச் செய்தும், பௌத்தர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பதை மௌனித்திருப்பதாகக் கருத வேண்டாம் என்று அன்று நான் நாடாளுமன்றத்தில் கூறினேன்.

அன்று விடுதலைப்புலிகள் மக்களையும், அரந்தலாவ பிக்குகள் உள்ளிட்டவர்களையும் கொலை செய்யும் போதும் கொழும்பில் இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடந்தன. பௌத்தர்கள் எந்தத் தடைகளையும் ஏற்படுத்தவில்லை. அதனால் நீங்கள் செய்யும் வேலையால் அனைத்து தமிழ் மக்களுக்கும் அவமானத்தையே கொண்டுவந்துள்ளது. இது பௌத்த நாடாகும். சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்குலக நாடொன்றின் தூதுவர் ஒருவர், ஏன் சிங்கள பௌத்த நாடு என்று கூறுகின்றீர்கள் என்று, ஒருவரிடம் கேட்டுள்ளார். நீங்கள் தேவேந்திர முனையில் இருந்து காங்கேசன்துறைக்கு உலங்குவானூர்தியில் போகும்போது தெரியும் விகாரைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ளமையாலேயே அவ்வாறு கூறுகின்றோம் என்று தூதுவருக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

இங்கு பழைய தூபிகளைப் பராமரிக்க எவருடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் அவசியமில்லை. அது தொல்பொருள் திணைக்களத்தின் பணியாகும். இந்து ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிகள் இந்த நாட்டில் அமைக்கப்படுகின்றன. அதற்கு பௌத்தர்கள் ஒருபோதும் எதிர்ப்பு வெளியிடுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கில் பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டாம் என்று கோஷங்களை எழுப்பிவிட்டு கொழும்புக்கு வந்து மீண்டும் வடக்குக்குப் போவதானது இது பௌத்த நாடு என்பதனாலேயே என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

வேறு நாட்டில் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமற்போயிருப்பார். குருந்தூர் விகாரை பராமரிப்புக்காக இடைவிடாது செய்யும் இடையூறுகளை நிறுத்தவேண்டும் என்று நாங்கள் மிகவும் விநயமாக அவர்களிடம் கேட்கின்றோம். இந்தப் பராமரிப்புப் பணிகளை தொல்பொருள் திணைக்களம் நிறுத்தாது முன்னெடுத்துச் செல்லும். அது நிறுத்தப்படாது.

இதேவேளை - இந்த நடவடிக்கைகளால் இனச் சுத்திகரிப்பு செயற்பாடு நடக்கும் என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் 25 ஆயிரம் வரையிலான சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர். அங்கு இப்போது எவ்வளவு முஸ்லிம் குடும்பங்கள் இருக்கின்றன? உண்மையில் இனச் சுத்திகரிப்பு நடந்திருந்தால் சிங்களம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகவே நடந்திருக்கும்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சரியான பாதைகளைக் காட்டுங்கள், இல்லாவிட்டால் இவர்களை விரட்டியடியுங்கள் என்று நான் தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (அ-எ-22)

## மாணவி...

செலுத்தியது. நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிள்ளைகள், தாய்மாரின் மந்தபோசணை தொடர்பாக யுனிசெப் நிறுவனம் விடுத்திருக்கும் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அஞ்சலியைச் செலுத்தினார்.

யாழ்ப்பாணம் - செம்மணியில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியின் 26 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று வடக்கு - கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி செம்மணிப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அவரைத் தேடிச் சென்றவர்களும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.

கிருஷாந்தியையும் அவரைத் தேடிச் சென்ற நிலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் உறவினர்களையும் நினைவுகூர்ந்து நேற்று அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. (அ-எ-22)

## நிலையற்ற...

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்ட உடன்படிக்கை தற்போது எட்டப்பட்டுள்ளபோதும், நிலையான அரசாங்கம் இன்மையால், உடன்படிக்கையின் உண்மையான வாய்ப்புக்களை சிறிலங்கா அடையமுடியாமற் போகும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலைமையால் கடும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளார் என்று அரசாங்க உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கு கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரும் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டபோதும், இதுவரை சாதகமான பதில் எதுவும் ஜனாதிபதிக்குக் கிடைக்கவில்லை என்றும் தெரியவருகின்றது.

மறுபுறத்தில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாகவுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன பிரதான அமைச்சுக்களைத் தம்வசம் கோருவதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அனைத்துக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குக் கட்சிகளுடன் பேச்சைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களை இது தடுக்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமானால் அந்த அரசாங்கத்துக்குள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கை ஓங்குவதை ஏனைய கட்சிகள் விரும்பாது என்கின்ற நிலையில், சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான பேச்சு ஆரம்ப நிலையிலேயே உள்ளன.

இந்த நிலைமைகளால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தொங்குபறி நிலைமையால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதில் ரணில் விக்கிரமசிங்க சவால்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். அரசியல் உறுதிப்பாட்டை குறுகிய காலத்தில் அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் தேர்தல் ஒன்றை நாடு சந்திப்பதனூடாகவே நிலையான அரசாங்கமொன்றை ஏற்படுத்தமுடியும். தென்னிலங்கையில் தற்போது உருவாகும் கூட்டணிகளும் தேர்தலை நோக்கியே அமைக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## இராஜாங்க...

அனைத்துக் கட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் இழுபறியிலேயே உள்ளது. பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்துக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க மறுத்துவரும் நிலையில், ஆளும் கட்சியினர் அமைச்சுப் பதவிகளுக்காக ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் கடும் அழுத்தங்களை அடுத்து இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

இன்று சுமார் 30 பேர் வரையில் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறப்படுகின்றது. (அ-எ-இ)

## கடனுக்கு...

வுக்குச் சென்றிருந்த அமைச்சர் நசீர் அஹமட், ஐந்தாண்டு கடன் திட்டத்தின் கீழ் சிறிலங்காவுக்கு எரிபொருளை வழங்குவது தொடர்பாகவும், அந்த நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் என்றும், அதற்கான ஆரம்ப இணக்கப்பாட்டை சவூதி வெளிப்படுத்தியுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-இ)

## ரணிலின்...

இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பிரதமராக்க ஆளும் தரப்புக்குள் சிலர் சூழ்ச்சி செய்கின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் வதந்தி.

ஜனாதிபதியின் விருப்பத்துடனும் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப் பலத்துடனும் நான் பிரதமர் பதவியை வகிக்கின்றேன். இது நான் தேடிச் சென்று பெற்ற பதவி அல்ல. இந்தப் பதவி என்னைத் தேடியே வந்தது. பிரதமர் பதவியிலிருந்து என்னை நீக்கத் திரைமறைவில் எந்தச் சூழ்ச்சியும் இல்லை. எவரினதும் அழுத்தமும் எனக்கு வரவும் இல்லை.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஏகோபித்த ஆதரவுடன்தான் நான் பிரதமர் பதவியை வகிக்கின்றேன். நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பது தொடர்பில் இன்னமும் முடிவை எடுக்கவில்லை.

அவர் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார் எனவும், பிரதமராகப் போகின்றார் எனவும் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை - என்றார். (அ-எ-22)

## தேசிய சபை...

கொண்ட தேசிய சபைக்குக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளைத் தணிக்கும் வகையில், தேசிய சபை அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சி தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

அந்த உடன்படிக்கையின்படி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தேசிய சபையின் தலைவராகவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க ஆகியோர் அதிகாரபூர்வமாக அதன் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசிய சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆகும். இதில் நாடாளுமன்றத்தில் செயற்படும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவுள்ளனர்.

இது தொடர்பான பிரேரணையை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது. (அ-எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கொடுப்பனவுக்கு இனி 'கியூஆர்' நடைமுறை?

கொழும்பு, செப். 8



**அரசின் நலன்திட்டங்களின் கீழ் பயன்பெறும் மக்களுக்கும் இனி கியூ.ஆர். முறைமையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என சமூக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி.விஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

அரசின் நலன்புரி மானியங்களை வழங்குவதற்கு தகுதியானவர்களைக் கண்டறியும் புதிய வேலைத் திட்டம் தொடர்பில் நேற்றுக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமுர்த்தி, முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் வாழ்வாதார உதவித் திட்டம் போன்ற நலத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் மக்கள், உதவித் தொகைகளுக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள குடும்ப உறுப்பினர்கள், மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு அரசின் நலத்திட்டங்களை எதிர்பார்க்கும் நலிவுற்றோர் ஆகியோர் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். இந்தத் திட்டத்தில் 3.9 மில்லியன் மக்கள் விண்ணப்பிப்பர் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 6 அடிப்படை நடவடிக்கைகளின் கீழ் இந்தப் புதிய திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது- என்றார். (ச-இ)

## எரிபொருள் விலை அதிகரிப்பால் உழவுக் கட்டணமும் அதிகரித்தது

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ளஅனைத்து வயல்களிலும் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்ப கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் முதற்கட்டமாக வயல்கள் பண்படுத்தப்பட்டு வருகின்றன.

வயல்களைப் பண்படுத்துவதற்கு எரிபொருள் வழங்கும் விவசாயிகளிடம் பரப்புக்கு 100 ரூபா வீதமும். எரிபொருள் வழங்காத விவசாயிகளிடம் பரப்புக்கு 500 ரூபா வீதமும் உழவியந்திரக் கூலி அறவிடப்படுகின்றது என நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். கடந்த வருடம் உழவு வேலைக்கு பரப்புக்கு 100 ரூபா தொடக்கம் 120 ரூபா வரை அறவிடப்பட்டதெனவும். தற்போது எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து உழவுக் கட்டணம் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்தனர். அத்துடன் விதை நெல் மற்றும் உர வகைகளின் விலையும் கடந்த வருடத்தை விட தற்போது மேலும் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்தனர். (ஒ-14-9)


**தேவை**

அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவர்கள், சாரதி, கூலியாட்கள் தேவை.

0777 722 215



**பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும்**

எதிர்வரும் **(14.09.2022) புதன்கிழமை** அன்று தொட்டியடி சனசமூக நிலையத்தில் சவாரி பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நடைபெற இருப்பதனால் அனைத்து சவாரி காளை உரிமையாளர் அனைவர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**முல்லைமாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச்சங்கம், தொட்டியடி.** (CS 20668) (2.6)


## போதை தடுப்புச் சட்டம்: கடுமையாக்கத் தீர்மானம்

கொழும்பு, செப். 8

நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துவரும் நிலையில், போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் பாவனை. நாட்டில் வேகமாக பரவி வருகிறது. இதனால் பல்வேறு குற்றச்செயல்கள் நாட்டில் தலைதூக்கியுள்ளன. தற்போது போதைப்பொருளை கைவசம் வைத்திருப்போர் மற்றும் விற்பனை செய்வோர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்படுகின்றனர்.

இந்தநிலையில் போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தில் புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதன்படி 5 கிராம் அல்லது அதைவிட அதிக தொகை ஐஸ் போதைப்பொருளை கைவசம் வைத்திருப்போர் மற்றும் விற்பனை செய்வோருக்கு பிணை வழங்கப்படமாட்டாது.

சந்தேகநபர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்பட தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வுக்காக விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## பரிசில் நாள் நிகழ்வு

கொடிகாமம் செப் 8

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான பரிசில் நாள் நிகழ்வு ஆசிரிய நினைவரங்கத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய-159)

## எரிபொருள் நிலையங்களை மூடும் நிலை உண்மைக்குப் புறம்பான செய்தி

*இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உறுதி*

கொழும்பு, செப். 8

எரிபொருள் இன்மையால் நாளாந்தம் சுமார் 300 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழமையை விட அதிக பவுஸர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல முனையங்களும், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன. சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளைப் போன்று எந்தவொரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

முறையற்ற வகையில் எரிபொருள் விநியோகத்தை தவிர்ப்பதற்காகவே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் ஆலோசனையுடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. தற்போது நாளாந்தம் இரு முனையங்களிலிருந்தும் சுமார் 4 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலும், 3 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோலும் விநியோகிக்கப்படுகிறன. இது எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்ட காலத்தில் விநியோகிக்கப்பட்டதை விட அதிகமாகும்.

எனவே எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூடப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம-14,இ)


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின்.(1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999, 076 4365 814, 077 8748 135



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606, 077 911 6983



**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

கடந்த 10.08.2022 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சிவசோதிலிங்கம் சொரூபன்**



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.09.2022) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்று முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் எதிர்வரும் (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் சந்தி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (CS 20650) (3/6)

குடும்பத்தினர் 077 239 5792


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org